# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.19/2007

வா.சா.3– குறுக்கு விசாரணை – நாள் 10–08–2026.

பெயர் = விஜய்

வா.சா.–3 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.–

(1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.S.W படித்துள்ளேன். பொதுவாக வாடகைக்கு குடியிருந்தால் வாடகை ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற விவரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டின் உரிமையாளருக்கும், எனக்கும் வாடகை ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் கிராமம் என்பதாலும், 2010 ல் வந்து குடியிருந்ததாலும் நம்பிக்கையின் அடிப்படையில் பத்திரம் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என சாட்சி கூறுகிறார். நான் வாடகைக்கு குடியிருந்தால் மேற்படி ஒப்பந்தம் ஏற்படுத்தியிருப்பேன் அவ்வாறு நான் குடியிருக்கவில்லை என்பதால்தான் நம்பிக்கையின் அடிப்படையில் இருந்ததாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை நான் குடியிருக்கும் வீட்டிற்கு வந்துதான் கொடுத்தார் அதனை நான் வீடியோ பதிவு செய்துள்ளேன். அதற்கான போட்டோ ஆதாரமும் உள்ளது என சாட்சி கூறுகிறார். நான் குடியிருப்பதாக சொல்லும் வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது வீட்டின் கதவு எண் தெரியும் 3/479A. எத்தனை வீடுகளாக உள்ளது என தெரியுமா என்றால் மூன்று வீடுகள் உள்ளது. நான் இருக்கும் வீட்டின் கதவு எண்.3/479A. கிழக்கே உள்ள வீட்டின் கதவு எண்.3/479. வாதி ஸ்டோர் ரூமாக பயன்படுத்தம் வீட்டின் கதவு எண்.3/479B.

(2) அழைப்பாணை சார்பு செய்யும்போது வீடியோ, போட்டோ எடுக்கவேண்டும் என நீதிமன்ற ஊழியர் சொன்னாரா என்றால் எனக்கு ஆதாரம் வேண்டும் என்பதற்காக போட்டோ, வீடியோ எடுத்தேன் என சாட்சி கூறுகிறார். போட்டோ, வீடியோ எடுத்தேன் என்பதன்மூலம் இவ்வழக்கில் பொய்சாட்சியமளிப்பதற்கு ஆவணங்கள் தயார்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீட்டில் என் மனைவி

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

குழந்தைகள் என்னுடன் இல்லை என்றால் எனக்கு திருமணம்ஆகவில்லை. என்னுடைய பணிநிமித்தம் நான் அடிக்கடி வெளியூரில் தங்குவேன் என்றால் சரிதான். மலைப்பட்டி கிராமத்தில் உள்ள வீட்டில் நான் நிரந்தரமாக இருக்கமாட்டேன் என்றால் சரிதான். நான் வசித்து வரும் வீட்டிற்கு ஆதார் அட்டை, குடும்ப அட்டை ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் குடியிருந்து வரும் வீட்டிற்கு மின்கட்டணம் நான் செலுத்துகிறேனா என்றால் ஆமாம். நான் மின்கட்டணம் செலுத்துவதற்கு ரசீது வைத்துள்ளேனா என்றால் ஆமாம். என் பெயரில் மின் கட்டணம் செலுத்துகிறேனா என்றால் இல்லை வாதி பெயரில் செலுத்துகிறேன். 2010 லிருந்து நான் மின்கட்டணம் செலுத்திவருவதற்கு ரசீது வைத்துள்ளேனா என்றால் அவ்வளவு ரசீதுகள் நான் வைத்துக்கொள்ளவில்லை நான் பாதிநாட்கள் வெளியில் சென்றுவிடுவதால் ஒருசில மாதங்கள் மட்டும் 50 ரூபாய், 100 ரூபாய் வரும் மற்றபடி இலவச மின்சாரத்தில் சென்றுவிடும் என சாட்சி கூறுகிறார். நான் செலுத்தியதாக சொல்லும் 50 ரூபாய், 100 ரூபாய்க்கான பில்களை வைத்துள்ளேனா என்றால் வீட்டில் பார்க்கவேண்டும்.

(3) நான் அருப்புக்கோட்டையிலுள்ள EB Office ல் மின்கட்டணம் செலுத்துவேனா அல்லது விருதுநகரில் செலுத்துவேனா என்றால் உள்ளூரில் உள்ள கடையில் செலுத்துவேன். நான் வாடகைக்கு இருக்கும் மலைப்பட்டி கிராமம் எந்த பஞ்சாயத்துக்குட்பட்டது என்றால் கூத்திப்பாறை பஞ்சாயத்தை சேர்ந்தது. எந்த தாலுகாவை சேர்ந்தது என்றால் அருப்புக்கோட்டை தாலுகாவை சேர்ந்தது. பஞ்சாயத்து தலைவர் யார் என்றால் தற்போது பஞ்சாயத்து தலைவர் யாரும் கிடையாது. இதற்கு முன்பு யார் இருந்தார் என்றால் சுதாகர் என்பவர் இருந்தார். கிழக்குபக்கம் உள்ள வீட்டில் உள்ள பாட்டியின் பெயர் சுப்புலட்சுமி. நான் பள்ளி கல்லூரிகளுக்கு Software ஏற்படுத்திக்கொடுப்பதற்கு ஒப்பந்தம் போட்டுக்கொண்டேனா என்றால் இல்லை. வழக்கு விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். 2010 லிருந்து நான் குடியிருந்து வந்திருந்தால் வாதி நீதிமன்றத்தில் விஜய் என்னும் நபர் குடியிருந்து வருவதாக சொல்லியிருப்பார்கள் என்றால் சரிதான். நான் குடியிருந்து வருவதாக வழக்கில் சொல்லவில்லை நான் தாவா வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாவா வீட்டில் 2010 லிருந்து குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் தாவா வீட்டில் குடியிருந்து வருவதற்கான முகவரியில் ஆதார் அட்டை, குடும்ப அட்டை எதுவும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஊழியர் தாவா வழக்கில் சம்மன்

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

கொண்டுவருவதாக எதன்மூலம் தகவல் சொன்னார் என்றால் செல்போன் மூலம் சொன்னார். என்னுடைய செல்போன் நம்பர் அவருக்கு எவ்வாறு தெரியும் என்றால் அங்கு வந்து விசாரித்து தெரிந்து மந்தையில் உள்ள நபரிடம் கேட்டு வாங்கியிருப்பார் மந்தையிலிருந்து தான் எனக்கு போன்போட்டு சொன்னார். நான் மந்தைக்கு சென்று நீதிமன்ற ஊழியர் யாரும் என் முகவரியை கேட்டார்களா என விசாரித்தேனா என்றால் இல்லை. அவர் வீட்டிற்கு வந்ததால் விசாரிக்கவில்லை. பிராதில் சொல்லாத சங்கதிகளைப் பொறுத்து நான் அளித்த சாட்சியம் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் குடியிருந்து வரும் வீட்டிற்கு வாடகை ரசீது எதுவும் வாதி கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

3ம் பிரதிவாதி தரப்பில் 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை தமதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S